# ஆய்வுச் சுருக்கம் (Abstract of the Dissertation)

கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவில் கற்பிக்கின்ற ஆசிரியர்களது வரவின்மைகளுடன் சம்பந்தமான முக்கியமான காரணிகளைக் கண்டறிந்து அவ்வாசிரியர்களது வரவுகளை மேம்படுத்தும் வழிமுறைகளினை இனங்கண்டு பொருத்தமான முறையில் முன்வைக்கும் நோக்குடனையே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இலக்கிய மீளாய்வு என்ற வகையில் எனது ஆய்வுடன் தொடர்புபட்ட ஆய்வுகள் என்றடிப்படையில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கங்களின் அடிப்படையில் ஆசிரியர் வரவின்மைகளில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் மூன்று வகையினதாக இனங்காணப்பட்டன. அவை ஆசிரியர் சம்பந்தமான காரணிகள், பாடசாலை சம்பந்தமான காரணிகள், சமுதாயம் சம்பந்தமான காரணிகள் எனக் குறிப்பிடப்பட்டன. ஆசிரியர் சம்பந்தமான 16 காரணிகளும், பாடசாலை சம்பந்தமான 4 காரணிகளும், சமுதாயம் சம்பந்தமான 5 காரணிகளும் உள்ளடக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களிடமிருந்து தரவுகளினைச் சேகரிக்கும் பொருட்டு ஆவணங்கள், வினாக்கொத்துக்கள், நேர்காணல் அட்டவணைகள் மற்றும் அவதானிப்பு அட்டவணைகள் போன்றன தரவு சேகரிப்புக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டது. இத் தரவு சேகரிப்புக் கருவிகளானது இலக்கிய மீளாய்வாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆய்வுப் படிப்புகளினூடாகப் பெறப்பட்ட ஆய்வுக் கருவிகளை அடிப்படையாகக் கொண்டு எனது ஆய்வு நோக்கத்திற்கு அமைய வடிவமைக்கப்பட்டு முற்சோதனை மூலமும், விரிவுரையாளர்களினதும், ஆசிரியர்களினதும் ஆலோசனை மூலமும் மறு சீரமைக்கப்பட்டன.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் தமிழ்மொழி மூலமான கஷ்டப்பிரதேச பாடசாலைகளான 29 அரச (கலவன்) பாடசாலைகள் இலக்குக் குடித் தொகைகளாகும். இவ்விலக்குக் குடித்தொகையிலிருந்து படையாக்கப்பட்ட மாதிரிகளாக அக்கரைப்பற்று கோட்டத்திலிருந்து 01 பாடசாலையும், அட்டாளைச்சேனைக் கோட்டத்திலிருந்து 03 பாடசாலைகளும், ஆலையடி வேம்புக் கோட்டத்திலிருந்து 01 பாடசாலையும், திருக்கோவில் கோட்டத்திலிருந்து 02 பாடசாலைகளும், பொத்துவில் கோட்டத்திலிருந்து 03 பாடசாலைகளும் உள்ளடங்கலாக 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டது. இவ்வாறு மாதிரிப்பாடசாலைகளிலிருந்து தரம் 1 - 5 வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஆண், பெண் ஆசிரியர்கள் என்போரின் விகிதாசார நிலையைப் பிரதிபலிக்கும்

விதமாகவும் தரம் 1 - 5 வகுப்புக்களைச் சமமாகப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலும் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் தலா 4 ஆசிரியர்கள் வீதம் 40 ஆசிரியர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஆண், பெண் ஆசிரியர்களின் விகித நிலைக்கு ஏற்ப முதல் நிலை 1, முதல் நிலை 2, முதல் நிலை 3 பிரிவுகளைச் சமமாகப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலும் 4 ஆசிரியர்கள் வீதம் 40 ஆசிரியர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 26 ஆண் ஆசிரியர்களும், 14 பெண் ஆசிரியர்களும் உள்ளடங்குவர். மேலும் தரம் 5இல் கற்கும் மாணவர்களின் விகிதத்திற்கு ஏற்ப 15 மாணவர்களும், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய 5 மாணவர்கள் உள்ளடங்கலாக 20 மாணவர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், மாதிரிப்பாடசாலைகள் 10 இலிருந்தும் தலா ஒரு அதிபர் வீதம் 10 அதிபர்களும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு மாதிரிப்பாடசாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் தொகைரீதியாகவும், பண்புரீதியாகவும் ஒப்பீடு, சராசரிகள், நூற்று வீதம், அட்டவணைகள், சட்டவரைபுகள், பரிதிகள், விளக்கம், வியாக்கியானம் போன்ற நுட்பங்களினூடாக தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வின் முடிவாக ஆசிரியர் வரவின்மைக்கும் ஆசிரியர் சம்பந்தமான காரணிகள், பாடசாலை சம்பந்தமான காரணிகள், சமுதாயம் சம்பந்தமான காரணிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளதினை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் ஆசிரியர் சம்பந்தமான காரணிகளில் அவர்களது வரவின்மைகளுடன் அதிகம் தொடர்புடைய 15 காரணிகள் இனங்காணப்பட்டதுடன், பாடசாலை சம்பந்தமான காரணிகளில் ஆசிரியர் வரவின்மைகளுடன் கூடியளவு சம்பந்தப்படும் 4 காரணிகளும் அத்துடன் சமுதாயம் சம்பந்தமான காரணிகளில் ஆசிரியர் வரவின்மைகளுடன் கூடியளவு சம்பந்தப்படும் 5 காரணிகளும் கண்டறியப்பட்டன.

மற்றும் ஆசிரியர் வரவின்மைகளின் போது பாடசாலைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற நிவாரண வேலைத்தொகுதிகள் பகுதியளவிலேயே வெற்றிகரமாகவுள்ளது என்பதையும், அத்துடன் மாணவர்களது கற்றல் செயற்பாடு, பரீட்சைப் பெறுபேறு, மாணவர்களது ஒழுக்கம், மாணவர்களது வரவின்மையும் இடைவிலகலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகள், பாடசாலை நிருவாகம், ஆசிரியர் - பெற்றோர் உறவு நிலை, என்பனவற்றில் ஆசிரியர்களின் வரவின்மைகள் கூடியளவு தாக்கம் செலுத்துகின்றது. என்பதுடன் ஆசிரியர் வரவின்மைக்கான காரணிகள் குறைந்து செல்வதற்குப்பதிலாக அதிகரித்துக்கொண்டு செல்வதனையும் ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.